Alexander Reinagle, 1799-1877

St. Peter
C.M.





பாமாலை 348 - நல் மீட்பர் இயேசு

1 நான் பலவீன தோஷியாம்,
நீர் தயாமூர்த்தியே;
நின் பாதத் தூளும் மேலிடும்
நிர்ப்பந்த நீசனே.

2 எப்பாவம் வெட்கம் எட்டிடா
ஏகாந்த ஜோதியே,
எம் பாவம் நிந்தை தாங்கினீர்
என் சொல்வேன் அன்பையே !

3 பிதாவின் மாட்சி ஆசனம்
அபாத்திர பாவிக்காய்
சுதா, நீர் நீத்து மாந்தர் தம்
சரீரம் எடுத்தீர்.

4 கை காலில் ஆணி பாய்ச்சுங்கால்
சகித்தீர் சாந்தமாய்;
ஐயா, எந்நாமம் சாற்ற உம்
பொறுமை தூய்மைக்கே!

5 அன்பே, நீர் மாந்தன் ஆக்கினீர்
என் அன்பைப் பெற்றிட;
நான் பாவி தோஷி வெட்கத்தால்
முன்னின்றற்கத் துணியேன்.

6 உம் தயை அன்பால் மட்டுமே
நான் பாத்திரன் ஆயினேன்;
உன் தாசர் காக்கும் வண்ணமே
காப்பீர் நீர் என்னையும்.